சார்பு நீதிமன்றம், மேலூர்

MCOP No.5/2024

பெயர் : சுமையாரோஜி
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :சக்கரைபீர்முகமது
வயது :27
கிராமம் :மேலூர்
வட்டம் :மேலூர்
தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.03.2025

ம.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு அசீனா பாத்திமா என்ற மகள் இருக்கிறார். அவருக்காகவும் நான் தான் சாட்சியளிக்கிறேன். 3ம் மனுதாரரான அமீனா பேகம் எனது மாமியார் ஆவார். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் கணவர் சக்கரை பீர்முகமது, கடந்த 02.05.2023 அன்று சாலை விபத்து அவருக்கு ஏற்பட்டது அது தொடர்பான முதல் தகவல்அறிக்கை 03.05.2023 சுப்பிரமணியன் 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது மேற்படி முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. விபத்து நடந்த பிறகு என் கணவர் ஓட்டிச்சென்ற TN59 BS 7927 Hero Honda splender இருசக்கர வாகனம் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் நான் காவல்துறை சார்பு ஆய்வாளர், மேலூர் அவர்களிடம் கடந்த 09.05.2023 அன்று வண்டியை மீட்டு கொடுக்கும் படி கொடுத்த புகார் ம.சா.ஆ.2. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் மீண்டும் 01.09.2023 அன்று வண்டியின் புகைப்படத்துடன் இணைத்து கொடுத்துள்ள புகார் நகல் ம.சா.ஆ.3. என் கணவர் சக்கரைபீர்முகமது அவர்கள் 07.05.2023 அன்று காலமானதை தொடர்ந்து அவருடைய உடற்கூராய்வு அறிக்கை ம.சா.ஆ.4.

என் கணவர் சக்கரைபீர்முகமது அவர்களுடைய பள்ளி மாற்று சான்றிதழ் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.5. எனது கணவர் சக்கரைபீர்முகமது அவர்களுக்கு இருசக்கர வாகனம் ஓட்டிச்சென்று விபத்துக்குள்ளானதாலும், அவர் வேன்டிரைவராக பணியாற்றி வந்ததாலும் அவருடைய ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.6. என் கணவர் சக்கரைபீர்முகமது அவர்களின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.7. என் கணவர் சக்கரைபீர்முகமதுஅவர்களின் வாரிசுதாரர் சான்றிதழ் ம.சா.ஆ.8. 1ம் எதிர்மனுதாரருடைய இருசக்கர வாகனம் பதிவு எண்.TN59 BV0123 வாகனத்தின் பதிவு சான்றிதழ் ஒளிநகல் ம.சா.ஆ.9. மேற்படி இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.10அதன்படி 28.11.2022 முதல் 27.11. 2023 முடிய மேற்படி இருசக்கர வாகனத்திற்குகாப்பீடு நடைமுறையில் இருந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் ம.சா.ஆ.11. என் கணவ் ஓட்டிச்சென்ற TN59BS 7927 ன் பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.12.மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.13 எங்களது மனுதாரர்களுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது 3 வரிசை ம.சா.ஆ.14 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் 3வரிசை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டதும.சா.ஆ.15.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.20 14:05:20 +0530

Sub Judge
Melur